பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 09 வியாழக்கிழமை 23.01.2025 கதிர் 076


## இது ரகசியம் அல்ல!

உப்பைத் தொடர்ந்து தேங்காய்களையும் இறக்குமதி செய்யும் நிலைக்கு இலங்கை சென்றுள்ளது. தேங்காய் உட்பட தெங்குப் பொருள்களை ☞ 2

# தமிழர் சமஷ்டித் தீர்வைப் பெற கனடா அழுத்தம் தரவேண்டும்

## தமிழ் அரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், ரெலோ இணைந்து அந்த நாட்டு அதிகாரியிடம் வலியுறுத்து

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப்பூர்த்திசெய்வதற்கான சமஷ்டித் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான அழுத்தங்களை கனடா பிரயோகிக்கவேண்டும்என்று வடக்கு,கிழக்குதமிழ்கட்சிகள் சிலவற்றின் பிரதிநிதிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. ☞ 2



## மின்துறை அமைச்சர் பொய்யுரைத்துள்ளார்

### நாடாளுமன்றில் தயாசிறி எம்.பி. பாய்ச்சல்

மின்கட்டணத்தை குறைக்க முடியாது என்று மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்தபோதும், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்கட்டணத்தை குறைத்துள்ளது. மின்சார சபையின் நிதி நிலைமை தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சர் சபைக்கு பொய்யுரைத்துள்ளார்.

அமைச்சருக்கு போலியான தகவல்களை வழங்கிய மின்சார ☞ 2

## 20 பில்லியன் ரூபாய் சீனாவால் அன்பளிப்பு

### அநுரவின் பயணத்தை அடுத்து

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தை அடுத்து, சீனாவினால் 500 மில்லியன் யுவான் (20 பில்லியன் இலங்கை ரூபாய்) நிதி நன்கொடையாக வழங்கப்பட்டதாகவும், அந்நிதி எதிர்வருங்காலங்களில் நாட்டுமக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கவின் அண்மைய சீனப் பயணத்திபோது ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் ☞ 8

## கலாசார மைய பெயர் மாற்றம் தமிழர்களை அவமதித்த செயல்

### தமிழ் அரசுக் கட்சி சீற்றம் தூதரகத்திற்குக் கடிதம்

இலங்கைத் தமிழ் இனத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாணம்' என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும். இது இந்தியாவுக்கும்எமக்குமிடையேயான நல்லுறவில் ஆழமான குழி யாக அமைந்து விடக்கூடாது. எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம் என்று தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பண்பாட்டு நிலையத்தின் பெயரை யாருக்கும் தெரியாமல் திடீரென திருவள்ளுவர் கலாசாரமையம்என்றுபெயர்மாற்றம் செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சி இந்தக்கடிதத்தை எழுதியுள்ளது. கட்சித் தலைவர்சிவஞானம்இந்தக்கடிதத்தை நேற்று இந்தியத் துணைத் தூவரிடம் நேற்று நேரில் கையளித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு அருகாமையில் திறந்தவெளி அரங்கு அமைந்திருந்த, யாழ்ப்பாண மாநகர சபைக்குஉரித்தானகாணியில்அதற்குப் பதிலாக இந்திய மத்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட 'யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்' 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோடிமற்றும்இலங்கையின்ஜனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைக்கப்பட்டது. யாவரும் அறிந்ததே.

இந்த நிறுவனத்தின் நிர்வாகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாநகர சபையின் நிதி வசதியீனத்தைக் காரணம் காட்டி அவ் வாறு செய்யப்படாமல் சில முக்கிய அரசியல் காரணங்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் ☞ 2

## ரஷ்ய ராணுவத்தில் சிக்கிகொண்டுள்ள இலங்கையர்களை மீட்க எடுத்த முயற்சிகள் என்ன?

### சிறீதரன் எம்.பி. சபையில் கேள்வி

குடும்ப பொருளாதார மேம்பாட்டுக்காக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்பட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது கேள்விகளை முன்வைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது குடும்பத்தின் பொருளாதார மேம்பாடு கருதி ☞ 2

## நிதி மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் அநுர யாப்பா கைது

### அவரது மனைவி உட்பட மேலும் அறுவரும் சிக்கினர்

முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரின் மனைவியும் கைது செய்யப் பட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத்திற்காக ஆளும்தரப்பால் பெறப்பட்ட ரூ. 6.1 மில்லியன் ரூபாவை தேர்தலுக்கான பரப்புரைகளுக்குத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற ☞ 2

## 33 சதவீதத்தால் குறைப்பதாக தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி மின் கட்டணத்தை குறையுங்கள்

### நாடாளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

தேர்தல்வாக்குறுதியாதியின்படி மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

அவர்நாடாளுமன்றத்தில் ☞ 8

## செல்வம் எம்.பியின் கடவுச் சீட்டை ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், நீதிமன்ற அனுமதி பெற்றே வெளிநாடு செல்ல முடியும் எனவும் அனுராதபுர மேல் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். ☞ 8

## திட்டப் பெயரை அறிமுகப்படுத்தும்போது தமிழ் பதங்களையும் அறிமுகப்படுத்துக

### ஆளும்தரப்புக்கு சத்தியலிங்கம் எம்.பி. அழுத்தம்

ஆளும்தரப்பின் செயற்றிட்டங்களின் பலவற்றின் சொற்கள் தமிழ் மக்களுக்குப் புரியவதில்லை. திட்டத்தின் தலைப்பு புரியாத சந்தர்ப்பத்தில் அந்தத் திட்டம் எவ்வாறு வெற்றியளிக்கும்? அஸ்வெசும என்பதன் தமிழாக்கம்என்ன, 16ஆம்திருத்தச்சட்டத்தில் வடக்கு கிழக்கில் ஆட்சி மொழி தமிழாகும். புதிய சொற்பதங்களை அறிமுகப்படுத்தும் போது அதற்குரிய தமிழ்ப் பதங்களையும் அறிமுகம் செய்யுங்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தூய ஷஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் நாட்டுக்கு தேவையானது. இதனூடாக பல விடயங்களை இந்த நாட்டில் தூய்மைப்படுத்தவேண்டியுள்ளது. நாட்டின் அரசியல், பொருளாதாரம், சமூககட்டமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் ஊடாக இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படவேண்டும். இந்த வேலைத் திட்டத்தின் நல்ல விடயங்களுக்கு இந்த ஆளும்தரப்புடன் இணைந்து பணியாற்ற நாங்களும் தயாராக இருக்கின்றோம்.

இந்த செயற்திட்டத்தின் ☞ 2

## உள்ளாட்சித் தேர்தல் திருத்த சட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலத்தின் சிலசரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி முஸ்லிம் காங்கிரஸ் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவை ஜனவரி 24 விசாரணைக்கு அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தாக்கல் செய்துள்ளார். நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில்நேற்றுவழக்கு அழைக்கப்பட்டது. ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இலங்கை ஏற்-றுமதி செய்த நிலை போய், தற்போதுஅதனைஇறக்குமதிசெய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கையில் சரியான திட்டமிடல் மற்றும் வசதிகளைச் செய்யாமல் உப்பு உற்பத்தியைக் கோட்டை விட்டது போன்றே, தெங்கு உற்பத்தியிலும் கோட்டை விடப்பட்டுள்ளது. வறட்சி, வெண் பூச்சித் தாக்கம் போன்றவற்றால் தெங்குப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டபோதே பிரச்சினையை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்கள் இல்லாததால் இப்போது நெருக்கடியையும் அதனைச் சமாளிப்பதற்கு இறக்குமதியையும் நம்பியிருக்கவேண்டிய நிலை வந்துள்ளது.

அடுத்த சில மாதங்களுக்குள் 200 மில்லியன்தேங்காய்களைஇறக்குமதிசெய்ய அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் தேங்காய் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம் உர விலை அதிகரிப்புத்தான் என்று இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரிவிக்கிறார்.

மேலும், தேங்காய் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதித் தொழில் துறைக்குத் தேவையான தேங்காய்இருப்புக்களைஅவசரமாகஇறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாடு சுமார் 1 பில்லியன் டொலர் வருவாயை இழக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கிறார். அதாவது தேங்காய் உற்பத்தி என்பது உள்ளூர்வாசிகளின் பிரச்சினை மட்டுமல்ல அரசின் வருமானத்தின் மீதும் கைவைக்கக்கூடிய பிரச்சினை என்பதையே அவர் சுட்டிக்காட்டுகின்றார். தேங்காய் இறக்குமதி இல்லை என்றால் அரசினவெளிநாட்டுக்கையிருப்புஅடிவாங்கும் என்பது அதன் பொருள்.

நாட்டின் மாதாந்திர தேங்காய் தேவை 2500 மில்லியன் என்றும், அதில் 1500 மில்லியன் தேங்காய்கள் உள்நாட்டு நுகர்வுக்கும், 1000 மில்லியன் தேங்காய்கள் தொழில்துறைக்கும்பயன்படுத்தப்படுவதாகவும் தலைவர் தெரிவித்தார்.

இந்நிலையில் நாட்டின் வருடாந்த மொத்த தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன்களாக இருந்த போதிலும், கடந்த ஆண்டு அது 2,680 மில்லியன்களாகக் குறைந்துள்ளதாகவும், இந்த ஆண்டு தேங்காய் உற்பத்தி 2,400 முதல் 2,600 மில்லியன்களாகக் குறையும் என்று தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் கணித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை 200 மில்லியன் தேங்காய் உற்பத்தி பற்றாக்குறை ஏற்படும் என்று தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் கணித்துள்ளதாக ஜயந்த சமரகோன் மேலும் தெரிவித்தார்.

''2023ஆம் ஆண்டில், தேங்காய் பொருட்கள்ஏற்றுமதி708மில்லியன்அமெரிக்க டொலர்களை ஈட்டியது, மேலும் நவம்பர் 2024 வரை, நாடு 782 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது, இது கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடும்போது 20 சதவீத அதிகரிப்பு. தெங்குப் பொருள் ஏற்றுமதி மூ-லம் ஆண்டு வருவாய் 850 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 17 சதவீத வளர்ச்சியுடன் மிக உயர்ந்த வருமானத்தைக் குறிக்கிறது. துறையின் வருவாய் திறனையும் அது ஆதரிக்கும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்க இந்த துறையை நிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தைஇது அடிக்கோடிட்டுக்காட்டுகிறது" என்று இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆக, மொத்தத்தில்ஏற்றுமதியையும்நிறுத்த முடியாது உள்ளூர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது என்கிற நிலைக்குள்தான் இலங்கை தள்ளப்படப்போகின்றது. இதனால் மக்கள்அனைவரும்கேட்டுக்கொள்ளப்படுவது யாதெனில்'யூ ரியூப்'பைப் பார்த்து தேங்காய்ப் பால் இன்றி கறி சமைப்பது எப்படி என்பதை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். 'தூய சிறீலங்கா' திட்டத்திற்குப் பின்னர் ஆளும்தரப்பின்அடுத்தபெரும்விழிப்புணர்வுத் திட்டமாக, தோங்காய் பால் இன்றி சமைப்பது எப்படிஎன்பதுதான்அடுத்துவரும்வருடங்களில் இருக்கும் போலுள்ளது. தயாராகுங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன்சமஷ்டிகுறித்துபெரும்பன்மைச் சிங்கள மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிதிவசதியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள கனடாவின் உலகளாவிய விவகாரங்கள் பிரிவின் தெற்காசியத் தொடர்புகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் மேரி-லூயிஸ் ஹனனுக்கும் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள கனடிய இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷும் பங்கேற்றிருந்தார்.

இச்சந்திப்பின்போது, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் காணி அபகரிப்பு, ஆக்கிரமிப்பு உள்ளிட்ட அன்றாடப் பிரச்சினைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கையின் தற்போதைய அரசமைப்பில் காணப்படுகின்ற ஒற்றையாட்சி முறைமை சம்பந்தமாக எடுத்துரைக்கப்பட்டது.

அரசமைப்பின் 13ஆவது திருத்ததை தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும் அழுத்தமாகக் கூறப்பட்டது. அதில் ஏற்கனவே பறிக்கப்பட்டுள்ளஅதிகாரங்கள்சம்பந்தமாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக கனடிய சமஷ்டி முறைமையிலான தீர்வுக்கு தனது அழுத்தங்களை வழங்கவேண்டும் என்றும் அதுபற்றி பெரும்பான்மை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## மின்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தலைவர் உட்பட அதிகாரிகள் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குழுவுக்கு அழைக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025.01.09 நாடாளுமன்ற அமர்வின் போது மின்கட்டண திருத்தம் தொடர்பில் மின்சாரத் துறை அமைச்சரிடம் கேள்வியெழுப்பி, 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சார சபை 167 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது என்று குறிப்பிட்டேன.

நான் முன்வைத்த விடயங்களை பொய் என்று மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டு, மின்சார சபை 332 பில்லியன் ரூபா கடனில் இருப்பதாக குறிப்பிட்டார். அத்துடன் இலாபமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுவதை நிரூபிக்குமாறும் தெரிவித்தார்.

மின்சாரத்துறை அமைச்சரின் கருத்தை சுட்டிக்காட்டி அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா இலங்கை மின்சார சபை 2024.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 119.29 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். ஆகவே மின்கட்டண திருத்தம் விவகாரத்தில் மின்சாரத்துறை அமைச்சர் பொய்யான தகவல்களை வழங்கி நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்தியுள்ளார்.

இதனால்எனதுசிறப்புரிமைமீறப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபைக்கும், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இடையில் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரிமாற்றிக்கொள்ளப்பட்ட கடிதங்களை முழுமையாக ஆராய்ந்து பார்த்துள்ளேன்.

இலங்கை மின்சார சபை 2024 ஜனவரி முதல் டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் 145 பில்லியன் ரூபாய் தேறிய இலாபடைந்துள்ளது. அத்துடன் இக்காலப்பகுதியில் 176.6 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது. ஆகவே பொய்யான தகவல்கள் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அமைச்சருக்கு தவறான தகவல்களை வழங்கிய மின்சார சபையின் தலைவர் உட்பட அதிகாரிகள் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குழுவுக்கு அழைக்கப்பட வேண்டும்.

மின்கட்டணத்தை குறைக்கபோவதில்லை என்று மின்சாரத்துறை அமைச்சர் கடந்த வாரம் குறிப்பிட்டார். ஆனால் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைத்துள்ளது.

20243 ஆம் ஆண்டு 9 இலட்சத்துக்கும் அதிகமானோரின் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2024 ஆம் ஆண்டு 6 இலட்சத்துக்கும் அதிகமானோரின் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. ஆகவே மின்சார சபையின் முறையற்ற நிர்வாகத்தினால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

## இலங்கையர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைவாய்ப்புக்காக இலங்கையர்கள் சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமான முறையிலும் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படும் போது வெளிநாட்டு முகவர்களினால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகியுள்ளன.

இந்த நாட்டு தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் இவ்வாறு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இராணுவத்தில்இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் எம்மிடம் முறையிட்டு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்துகிறார்கள்.

இதற்கமைய அதிர்ஷ்ட ராஜா கேமஸ் விதூஷன் - யாழ்ப்பாணம், பகிரதன் - கரவெட்டி, சுந்தரலிங்கம் பாலச்சந்திரன் - முல்லைத்தீவு, பிரதாப் - யாழ்ப்பாணம், சிவேஸ் - யாழ்ப்பாணம், ஆகியோர் முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2022.10.20 ரஷ்யா - பெலராஸ்எல்லையில்விஜயகுமார் முகுந்தன் காணாமல் போயுள்ளார். இவருக்கு என்ன நேர்ந்தது என்பது இதுவரை தெரியவில்லை. ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கையரின் எண்ணிக்கை, உயிரிழந்துள்ளவர்களின் விவரம் மற்றும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்பதை ஆளும்தரப்பு அறிவிக்க வேண்டும்.

ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் சொல்லொனா துயரங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். தமது உறவுகளை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். ஆகவே நெருக்கடிக்குள்ளாகியுள்ள எமது நாட்டவர்களை மீட்க அரசாங்கம் துரிதகர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்குஎழுந்துபதிலளித்தஅயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா , இவ்விடயம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்தப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு தரவுஅடிப்படையில்பதிலளிக்க வேண்டும் ஆகவே 1 வார காலவகாசம் கேட்கிறேன் என்றார்.

மீண்டும் எழுந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், முன்வைக்கப்பட்டுள்ள இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு ஆளும்தரப்பு ஒருவார காலத்துக்குள்சிறந்தபதிலைவழங்கவேண்டும் - என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைத் தவிர, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக மேலும் 6 பேரை குற்றப் புலனாய்வுத்துறையினர்கைதுசெய்துள்ளனர்.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில், அவர்கள் கைது செய்யப்பட்ட இவர்கள் இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## திட்டப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமாக நீண்டகாலமாக நிலைத்திருக்கக்கூடிய சமூக கலாச்சார மாற்றங்களை மக்களிடையே ஏற்படுத்தவேண்டும். இது ஒரு இனத்திற்காக அன்றி அனைத்து இன மக்களுக்குமான வேலைத்திட்டம். எனவே உங்களுடன் பணியாற்ற நாங்கள் விரும்புகின்றோம். நல்ல நடத்தை மாற்றத்தை செய்யாது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது.

இதனைநாங்கள்முதலில்செய்யவேண்டும். இந்த வேலைத்திட்டம் தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்ச்சியொன்றை பார்க்க முடியுமாக இருந்தது. அது இரண்டு மொழியில் மட்டுமே செய்யப்பட்டது. தமிழ் மொழியில் அது இருக்கவில்லை. இதனால் நடத்தை மாற்றத்தை எங்களிடம் இருந்து ஆரம்பித்து தமிழையும் அதில் சேருங்கள் என்று கோருகின்றோம்.

இதேவேளை ஆளும்தரப்பின் வேலைத் திட்டங்கள் பலவற்றின் சொற்கள் மக்களுக்குப் புரியவதில்லை. வேலைத்திட்டத்தின் தலைப்பு புரியாது அந்தத் திட்டம் எவ்வாறு வெற்றியளிக்கும்? அது சந்தேகத்திற்குரியதே.

அஸ்வெசும என்பதன் தமிழாக்கம் என்ன? 16ஆம் திருத்தச் சட்டத்தில் வடக்கு கிழக்கில் ஆட்சி மொழி தமிழாகும். புதிய சொற்பதங்களை அறிமுகப்படுத்தும்போது அதற்குரிய தமிழ்ப் பதங்களையும் கொண்டு வாருங்கள். உறுமய போன்ற திட்டங்களின் தமிழ்பொருளையும்வெளிப்படுத்தவேண்டும்.

அத்துடன் மத நல்லிணக்க அமைச்சின் பௌத்த சாசன அமைச்சு மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆளும்தரப்பில் மூன்று மதங்களுக்கும் தனித்தனி அமைச்சுகள் இருந்தன. இந்நிலையில் 'தூய ஸ்ரீ லங்கா' திட்டத்தில் அனைத்து மதங்களையும் சமமாக மதிக்கக்கூடிய வகையில் திட்டத்தை முன்னெடுப்பீர்கள் என நம்புகின்றோம் என்றார்.

## உள்ளாட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பணங்களை முன்வைப்பதற்காக ஜனவரி 24 அதனை மீண்டும்அழைக்குமாறு நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்களை நீக்கும் நோக்கத்துடன் ஆளும்தரப்பு இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளதாக சுட்டிக்காட் டியுள்ள மனுதாரர், முன்மொழியப்பட்ட சட்டமூலத்தில் உள்ள சில விதிகள், மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதிக்கின்றது என்றும் இது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த சட்டமூலத்தில் உள்ள சர்ச்சைக்குரிய சரத்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டுமானால், அவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்புமூலம்அங்கீகரிக்கப்படவேண்டும் என தீர்ப்பளிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது நாளாகவும் இடம்பெற்ற 'தூய ஸ்ரீ லங்கா' வேலைத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின் கட்டணத்தை மூன்றில் ஒரு வீதம் குறைப்பதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும், மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தார்.

6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபையும் கூறியது. பொது மக்களின் கருத்துக்களின் அடிப்படையில்பொதுபயன்பாட்டுஆணைக்குழு 20 வீதத்தால் மின் கட்டணத்தை குறைத்தது.

இதற்கு நிதி அமைச்சின் ஒப்புதல் தேவை என்கின்றனர். எனவே தற்போது இதனை 20 வீதத்தால் குறைப்பதோடு, தேர்தல் வாக்குறுதியாக வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை 33 வீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று வெளிநாட்டு கடவுச்சீட்டு பிரச்சினை பெரும் பிரச்சினையாக தற்போது மாறியுள்ளது. நீண்டகாலமாக இருந்துவரும்இந்தகடவுச்சீட்டுதட்டுப்பாட்டுக்கு முகம்கொடுத்துவந்த மக்கள் மேலும் கஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். இதற்கு தீர்வுகாண ஆளும்தரப்பால் முடியாமல் போயிருக்கிறது. நிகழ்நிலை முறையிலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# தேராவில் துயிலுமில்லக் காணி விடுவிப்பு குறித்து வடக்கு ஆளுநருடன் கலந்தாய்வு

## ஜனாதிபதி, பிரதமருக்கும் மனுக்கள் கையளிப்பு

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணியை விடுவிக்க கோரி தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் திங்கட்கிழமை மாலை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை சந்தித்து கலந்துரையாடினர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணி விடுவிப்பு தொடர்பில் அண்மையில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.இதன் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்ட சுமார் 2500 பேரின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க கையளிக்கும் முகமாகவும் ஆளுநருக்குரிய மகஜரை கையளித்து காணியை விடுவிக்க கோரும் முகமாகவும் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.




இதன்போது நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை விடுவித்தல் தொடர்பானது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புன்னைநீராவி கிராமசேவையாளர் பிரிவில் குமாரசாமிபுரம் கிராமத்தில் தேராவில் பகுதியில் உள்ள தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் கடந்த 1995ஆம் ஆண்டு காலப்பகுத்தியிலிருந்து 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் இறுதிக்காலம் வரை போரில் வீரகாவியமானஎண்ணாயிரத்திற்கும் அதிகமான எமது பிள்ளைகள் உரித்துடையோர் அனைவரையும் யுத்தவீரர்களுக்கானமரியாதையுடன் புதைக்கப்பட்டும் நடுகற்கள் நாட்டப்பட்டும் பராமரிக்கப்பட்டு பூசிக்கப்பட்டுவந்தமைஇவ்வுலகமும் தாங்களும் அறிந்த உண்மை.



மாவீரர்பெற்றோர், உரித்துடையோர்
மாவீரர் துயிலும் இல்லம்,
தேராவில்,
விசுவமடு
20.01.2025

அதி மேதகு ஜனாதிபதி அவர்கள்,

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை விடுவித்தல் தொடர்பானது

ஐயா,

இறுதி யுத்தகாலத்தில் கனரக வாகனங்கள் கொண்டு வடக்கு கிழக்கில் உள்ள புனித துயிலும் இல்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்ட போது எமது தேராவில் மாவீரர் துயிலும் இல்லமும் முற்றுமுழுதாக சிதைத்து அழிக்கப்பட்டது. அதன் பின்னரான காலப்பகுதியில் துயிலுமில்ல வளாகமானது வேறு அரச இராணுவ தேவைகளுக்காக கடந்த அரசுகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை நிதர்சனமான உண்மை.

மேற்படி விடயமானது பெற்றோர்களாகிய எமக்கும் உறவினர்களுக்கும் எங்களுக்கு மிகவும் புனிதமான துயிலும் இல்லங்களை இழிவுபடுத்தும் இத்தகைய செயல்கள் மிகுந்த மன வலியையும் சொல்லொணா மன உளைச்சல் மற்றும் துயரத்தையும் ஏற்படுத்துயுள்ளது.

போர் முடிந்ததிலிருந்து இலங்கை இராணுவத்தின் 573 வது படையணி தேராவில் துயிலும் இல்லத்தை வலிந்து தமது ஆக்கிரமிப்பில் வைத்துள்ளது. ,14 ஆவது இலங்கை தேசிய படையணி அங்கு தங்கி சீமெந்துகற்களைஉற்பத்திசெய்யும் இடமாக அதைப் பயன்படுத்தினர். தற்போது அந்த செயல்பாடும் அங்கு இல்லை.

உயிரிழந்தவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள இடங்களை வேறு நோக்கங்களுக்காக, அதிலும் குறிப்பாக வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது சர்வதேச விதிமுறைகள் மற்றும் மரபுகளை அப்பட்டமாக மீறுவதாகும், மேலும் அது புனிதத்தை களங்கப்படுத்துவதற்குச் சமம். தற்போது, அங்கு ஐந்து இராணுவத்தினர் மட்டுமே தங்கியுள்ளனர், மேலும் அவர்கள் எந்த வேலையிலும் ஈடுபடவில்லை.

இராணுவம் வேண்டுமென்றே அந்த நிலத்தை தங்களின் வலிந்த ஆக்கிரமிப்பின் கீழ் வைத்திருக்க விரும்புகிறது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

எங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் விதைக்கப்பட்டுள்ள தேராவில் துயிலும் இல்ல நிலத்தை விடுவிக்குமாறு நாங்கள் இப்போது உங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த துயிலும் இல்லம் எங்களுக்கு மிகவும் புனிதமானது, அங்கு சென்று நாங்கள் வீழ்ந்த எமது உறவினர்களுக்கு புனித அஞ்சலி செலுத்துவதற்கும், மரியாதை செலுத்துவதற்கும் தனிநபர் சுதந்திரத்தை பாதிக்காத வகையில், சட்ட வழிமுறைகளுக்கு அமைவாக அந்த நிலத்தை விடுவித்து கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

மேலும், அந்த நிலத்தை விடுவிக்கும் போது, அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டவர்களின் குடும்பங்கள் ஆண்டு முழுவதும், குறிப்பாக 'மாவீரர் நாளன்று' பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் வந்து அஞ்சலி செலுத்துவதற்கு வசதியாக, தடையற்ற அணுகலை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரதிகளாகபிரதமர்,வடக்குமாகாண ஆளுனர், மீன்வளத்துறை அமைச்சர், யாழ்ப்பாணநாடாளுமன்ற உறுப்பினர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் கிராமங்கள் உடனடியாக மீள்குடியேற்றப்படல் வேண்டும்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

ஆக்கிரமிப்பு முற்றுகைக்கள் இருக்கும் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமக்களை மீள்குடியேற்றுவதற்கு புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலிசமரசிங்க மற்றும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், உரிய அரச அதிகாரிகள் முன்னிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் ஆகியகிராமங்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை.

தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்குத் தயாராக இருக்கின்றனர்.



குறித்த கிராமங்களைச்சேர்ந்த மக்கள் தம்மை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு என்னிடமும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு அப்பகுதிகளிலிருந்த மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தனர். இருப்பினும் அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் இவ்வாறாகத் தம்மை தமது சொந்தக் கிராமங்களில் மீள்குடியேறவிடாமல் தடுத்துவைத்துக்கொண்டு, தமது பூர்வீக கிராமங்களில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றதா என்ற அச்சத்துடன் அப்பகுதிகளுக்குரிய மக்கள் காணப்படுகின்றனர்.

எனவே புதிய அரசாங்கமானது தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமமக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்தவேண்டும். அவர்களை மீள்குடியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். - என்றார்.

மேலும் தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம்பகுதிகளில் தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டிற்குமுன்னர் குடியிருந்த பெருமளவான பகுதிகளை தொல்லியல் திணைக்களம், வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன கையகப்படுத்திவைத்துள்ளதுடன், தண்ணிமுறிப்பில் அமைந்துள்ள தமிழர்களின்பூர்வீகவழிபாட்டிடமானகுருந்தூர்மலையில் அடாத்தாக பௌத்த கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தரவுகளின் வலிமை

எதிர்க்கட்சிவரிசையில்இருப்பதுவேறுஆளும்தரப்பில் இருப்பது வேறு என்பதை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க இப்போது உணர்ந்திருப்பார் என்று தோன்றுகின்றது. ஆளும்தரப்பில் இருந்து பிரச்சினைகளின் உண்மை முகத்தை அணுகுவதும் அதற்கான தீர்வுகளை எட்ட முயற்சிப்பதும் மிகவும் சிக்கலானவைஎன்பதும்அவருக்குத்தெரியவந்திருக்கும்.

நாட்டில்அரிசிஆலைஉரிமையாளர்களைதேர்தலுக்கு முன்னர் 'மாபியா'க்கள் என்று வர்ணித்த அரசுத் தலைவர் இப்போது நெல்லைப் பதுக்குவதால் ஆலை உரிமையாளர்களுக்கு இலாபம் கிடையாது என்கிறார். அதுமட்டுமல்லாமல் இலங்கையின் ஆண்டுக்கான நெல் உற்பத்தி அளவு, அரிசித் தேவையின் அளவு குறித்த சரியான புள்ளிவிவரங்கள் எவையும் இல்லை என்கிறார். அப்படிச் சரியான விவரங்கள் எவையும் இல்லாமலே எதிர்க்கட்சியிலிருக்கும்போது அவர் எப்படி குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் என்பதும் கேள்விக்குரியதுதான்.

''அரிசி தொடர்பிலான தரவுகள் பெருமளவில் திரிவுப்படுத்தப்பட்டுள்ளன. வருடமொன்றுக்கு எவ்வளவு அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது என்பது எமக்கு தெரியாது. வருடமொன்றுக்கு தேவையான நுகர்வின் அளவும் எமக்கு தெரியாது. அவ்வாறானதொரு நாட்டில் எவ்வாறு தீர்மானம் எடுக்க முடியும்.

பெருமளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் வங்கிகளில்கடன்பெற்றுகொண்டேநெல்லைசேகரித்து வைத்துள்ளனர்.அவர்களிடம் நிரந்தர தொழில் புரியும் ஊழியர்களே உள்ளனர். பதுக்கலை செய்து அரிசி ஆலையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாது. அது அவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும். நாளாந்தம் ஆலைகளை மூடி வைத்திருப்பதைவிட 2 ரூபாய் இலாபத்திற்கு வழங்குவது சிறந்தது என சிறிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் எம்மிடம் கூறுகின்றனர்.

அவர்கள் வங்கியில் கடன் பெற்றுக் கொண்டுள்ளனர். போக்குவரத்து கட்டணம் செலுத்த வேண்டும். ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். எனவே பெருமளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைப் பதுக்கி வைக்கவில்லை.அது பொய்யாகும்.

தடுப்பதற்காக போதுமான வளம் இன்றி இதற்கு எதிராக எம்மால் போராட முடியாது. சரியான வளங்களை எம்மால் ஏற்படுத்திக் கொண்டால் மட்டுமே எம்மால் அந்த சவாலுக்கு முகங்கொடுக்க முடியும். இனிவரும் காலத்தில் எமது திட்டத்திற்கு அமைய செயல்படவில்லை எனில் அவர்களுக்கு எதிராக நாம் செயற்படுவோம்.சட்டத்தை மீறினால் அரிசி ஆலைகளை இராணுவத்தினரின் பொறுப்பில் கொண்டு வருவோம்'' என்று அரசுத் தலைவர் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்கள், அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதில் அவரது ஆளும்தரப்பு இதுவரையில் எடுத்து வந்த, கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு, அரிசி ஆலைகளில்சோதனைநடவடிக்கைஎன்பனவெல்லாம் தோல்வியடைந்துவிட்டன என்பதையே காட்டுகின்றன. சரியான புள்ளிவிவரங்கள் இன்றி எந்தவொரு விடயத்திலும் சரியான அடைவை எட்டமுடியாது. அப்படிப்பட்ட நிலையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது ஆட்சி மாற்றத்தைச் சாத்தியமாக்கலாமே தவிர, பிரச்சினைக்குத் தீர்வைத் தரமுடியாது என்பது தெளிவாகின்றது.

இனிவரும்காலங்களிலாவதுஅரிசிஉற்பத்திவிடயத்தில் மட்டுமல்லஅனைத்துவிடயங்களிலும்சரியானதரவுகள் திரட்டப்படுவதையும் பேணப்படுவதையும் உறுதிப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# ரூ. 70 மில்லியன் மோசடி வழக்கில் நாமலுக்கு எதிராக தனி விசாரணை

கொழும்பு கோட்டையில் உள்ள கிரிஷ் டிரான்ஸ்வொர்க் சதுக்கத்தில் 4.3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்ததில் 70 மில்லியன் ரூபாய் நிதி முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் வழக்கில் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தனியான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அவர்கள் இதனை அறிவித்தனர்.

இந்த வழக்கின் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இன்று வழக்கு விசாரணைக்கு நீதிமன்றுக்கு வந்திருந்தார்.

வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, இந்த சம்பவம் தொடர்பாக இலஞ்சம் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக தனி விசாரணையை ஆரம்பித்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதன்படி, முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, கிரிஷ் நிதி மோசடி தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு வரும் வழக்கை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும் வகையில் ஜூன் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# வீட்டுத் திட்டங்களை இனி எப்போது மட்டக்களப்பில் பூர்த்திசெய்வீர்கள்?

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் எம்.பி. கேள்வி

நல்லாட்சி அரசு காலப்பகுதில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டங்கள் முழுமையடையுமா? எப்போது அவற்றைப் பூர்த்திசெய்வீர்கள் என்று ஒரு காலவரையறை சொல்லமுடியுமா? என்று நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி பதிலின் போது சாணக்கியன் கேள்வி எழுப்பினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வீட்டுத் திட்டங்கள் அனைத்தும் கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் எம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அதிகாரசபையின் அமைச்சராக இருக்கும்போது உருவாக்கப்பட்டவை. ஆனால், 2019 ஆம் ஆண்டிலிருந்து கோட்டாபய ராஜபக்ச ஆட்சயில் சஜித் பிரேமதாசவைப் பழிவாங்கும் அடிப்படையில் அந்த வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்யாமல் அரைகுறையாகவே விடப்பட்டது. வீட்டுத்திட்ட பயனாளிகளில் பலர் கடனாளி களாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்டளவு வேலைகளை செய்தால் அடுத்த தொகைகிடைக்கும்என்றேஅவர்களுக்குகூறப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும்போரதீவுப்பற்றாகஇருக்கட்டும்வாகரையாக இருக்கட்டும் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவாக இருக்கட்டும் மாவட்டம் முழுவதும் எத்தனையோ வீடுகள் குறைபாட்டுடனேயே காணப்படுகின்றன.

நீங்கள் அளித்த பதிலிலே உங்களுக்கான ஒதுக்கீடுகள் வரும்போது செய்யலாம் என்று கூறியிருந்தீர்கள். ஆனால் என்னுடைய கேள்வி, இந்த மக்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு கடனாளியாக வீடும் இல்லாது, கடனாளியாகவும் இருப்பது?

இனிவரும் காலத்தில் முடித்து தருகிறோம் என்பது திருப்தியடையக் கூடிய பதில் இல்லை. ஒரு பொறுப்புள்ள ஆளும்தரப்பு என்றால் நாம் ஒரு ஆறு மாதம் அல்லது ஒரு வருட காலத்திற்குள் நிறைவு செய்து தருகிறோம் அல்லது நாம் முடித்து தர மாட்டோம் என கூற வேண்டும். ஏனெனில் இந்த மக்கள் இன்னும் எத்தனை காலத்திற்கு வீடு வருமா இல்லையா என காத்திருப்பது? ஆளும்தரப்பு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியை, அதாவது ஒரு மாதமோ அல்லது ஒரு வருடமோ அல்லது 2025ஆம் ஆண்டிற்குள்ளோ என்று ஒரு குறிப்பிட்ட திகதியை கூற முடியுமா என்று கேட்கின்றேன். ஒதுக்கீடுகள் வரும் போது செய்வோம் என்ற பதிலை எமது மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - என்றார்.

பதிலளித்த அமைச்சர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மக்கள் தொடர்பிலான உங்களது கரிசனையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. எனினும் வீடமைப்பு அதிகார சபையில் நாம் பெற்ற தகவல்களுக்கு அமைய கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்படாத நிலையில் சுமார் 48 ஆயிரம் வீடுகள் உள்ளன. நீங்கள் குறிப்பிட்ட மட்டக்களப்பு மாவட்ட வீட்டுத்திட்டங்கள் அந்த 48 ஆயிரத்தில் உள்ளடங்கும் சிலவாகும். நீங்கள் குறிப்பிட்டது போன்று அந்த 48 ஆயிரத்தில் சிலது அடிக்கல் நாட்டப்பட்டவை, சிலவற்றுக்கு சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

வீடமைப்பு அதிகார சபையுடன் எமது அமைச்சு நடத்திய கலந்துடையாடலுக்கு அமைய பல்வேறு பெயர்களின் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் நிறைவுசெய்யப்படாத வீடமைப்புதிட்டங்களை கட்டம் கட்டமாக ஒதுக்கீடுகள் கிடைக்கும் அடிப்படையில் நிறைவு செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை மீண்டும் விசேடமாக அரச வங்கிகளுடன் கலந்துரையாடி ஏதேனும் கடன் திட்டங்களை மீண்டும் ஆரம்பித்து அவர்களுக்கு தமது வீடுகளை நிறைவு செய்து கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

இதேவேளை வருடாந்த வரவு செலவு திட்டத்தில் வீடமைப்பு அதிகார சபைக்கான ஒதுக்கீடுகளின் ஊடாக ஒரு பகுதியை கட்டம் கட்டமாக இந்த வீட்டுத் திட்டத்தில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்தும் திட்டங்களை வகுத்து வருகிறோம். எனினும், 48 ஆயிரம் வீடுகளையும் நிறைவு செய்ய பெரும் தொகைப் பணம் செலவாகும். அதனை நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம். கிடைக்கப் பெறும் நிதி ஒதுக்கீடுகளுக்கு அமையவே எந்த திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து எப்போது நிறைவு செய்வது என்பதை குறிப்பிட முடியும். ஆனால் குறித்த விட்டுத்திட்டத்தை குறித்த காலத்தில் நிறைவு செய்வோம் என்பதை உறுதியாக என்னால் கூற முடியாது. அது குறித்து நான் தனிப்பட்ட ரீதியில் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

''எனது கேள்விக்கு பதிலளித்தமைக்கு நன்றி கௌரவ அமைச்சர் அவர்களே. இந்த வீடமைப்புதிட்ட தேவையை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவையில் கலந்துரையாடி அதிகளவான நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமரிடம் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சாணக்கியன் தெரிவித்தார்.

# விதி மீறும் சாரதிகளைப் பிடிக்க புதிய மென்பொருள் அறிமுகம்

கொழும்பு நகரில் போக்குவரத்து விதி மீறல்களைச் செய்யும் சாரதிகளை அடையாளம் காண புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கை பொலிஸாரால் புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வீதி விபத்துகளைக் குறைப்பதும், போக்குவரத்து விதி மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதும் இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமாகும். அண்மைக் காலங்களில் கொழும்பு நகரில் அதிக எண்ணிக்கையிலான வீதி விபத்துகள், சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி விபத்துகளைக் குறைப்பதற்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மென்பொருளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று பதில் பொலிஸ் மா அதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தலைமையில் நடைபெற்றது.

இந்தப் புதிய மென்பொருள் ஊடாக கொழும்பு பிரதான சி.சி.டி.வி செயல்பாட்டு அறையில் உள்ள சி.சி.டி.வி அமைப்பு மூலம் கொழும்பு நகரில் போக்குவரத்து விதி மீறல்களைச் செய்யும் சாரதிகள் காண்காணிக்கப்படவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிட்டங்கி வீதி வெள்ள நீரால் மூழ்கியது போக்குவரத்து பாதுகாப்புடன் நடைமுறை

(பாறுக் ஷிஹான்)

கிட்டங்கி வீதி அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் பரவல் காரணமாக அப்பகுதியால் பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அறிவுறுத்தல் பின்பற்றி செல்வதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பையும்இணைக்கும்கிட்டங்கிதாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக கிட்டங்கிதாம்போதியில் வெள்ளம் பாய்வதுடன் கல்முனை சேனைக்குடியிருப்பு நாவிதன்வெளி சவளக்கடை பிரதேசங்களை தரை வழியாக இணைக்கின்ற கிட்டங்கி பாலமானது அதிகரித்த ஆற்றின் நீர்மட்டம் காரணமாக இராணுவம் பொலிஸார் நாவிதன்வெளி பிரதேச செயலகம், பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவ குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தவிர கல்முனை ஆழ்கடல் சுழியோடி அணி இரண்டு நாள்களாக அப்பகுதி ஊடாக பயணம் செய்கின்ற அரச மற்றும் தனியார் அதிகாரிகள் மாணவர்களை பாதுகாப்பாக பயணம் செய்வதற்கு உதவி செய்வதுடன் தன்னார்வமாக தனது சேவைகளை முன்னெடுத்து வருவதுடன் அப்பகுதியில் பயணம் செய்ய சிரமப்படும் பொதுமக்களை இனங்கண்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளதை காண முடிகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் பரவலாக காணப்படுவதுடன் சில இடங்களில் வடிந்தோடி காணப்படுகின்றது தினமும் விவசாயிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் என





ஆயிரக்கணக்கானவர்கள் நாளந்தம் பயணிக்கும் இவ்வீதியில் வெள்ள நீர் பரவி வருவதால் பிரதேச மக்கள் பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் தமது அன்றாட பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் வீதிக்கான நிரந்தர பாலம் அமைக்குமாறு நீண்டகாலமாக பிரதேச மக்களால் விடுக்கப்படும் கோரிக்கையை இதுவரைக்கும் எந்த அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை ஏழு வருடங்களின்பின்னர் திறந்துவைக்க ஏற்பாடு

(சகா தேவராஜா)

3 கோடி ரூபா செலவில் நிருமாணிக்கப்பட்ட களுதாவளை பொருளாதார மத்திய நிலையம் ஏழு வருடங்களின் பின் திறந்துவைக்க ஏற்பாடு நடைபெறுகிறது.

மட்டக்களப்பு - களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைப்பது தொடர்பான கலந்துரையாடல் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 2018 ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சால் நிர்மாணிக்கப்பட்ட களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் அரசாங்க அதிபரும் முகாமைத்துவ சபையின் தலைவருமான திருமதி ஜே. ஜே. முரளிதரன் தலைமையில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது பொருளாதார மத்திய நிலையத்திற்கான முகாமைத்துவ பொறுப்பு சபையின் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களது மரக்கறி வகைகள், பழவகைகள் மற்றும் உள்ளூர் உணவு உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றை நியாய விலையில் பெற்று, அதனை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்துவைப்பது தொடர்பாகவும், களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தின் அவசியம் பற்றியும் ஆராயப்பட்டது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் முப்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஐம்பது கடைத்தொகுதிகளை கொண்டதாக இப்பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் கடைத்தொகுதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆர்வம் காட்டியிருந்த உற்பத்தியாளர்களும், கலந்து கொண்டிருந்ததுடன்,





பொருளாதார நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தல் மற்றும் கொள்வனவு செய்தல் மற்றும் சவால்கள் பற்றியும் கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். நவநீதன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ரீ. நிர்மல்ராஜ், பிரதேச சபையின் செயலாளர் எஸ். அறிவழகன், விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் எம்.எப்ஏ சனீர், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ. அபேவிக்கிரம, களுவாஞ்சிகுடி வர்த்தக சங்க தலைவர், கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தூய ஸ்ரீலங்கா கருத்திட்டத் தெளிவூட்டல்

(சியாஜ்)

' செழுமையான தேசம் அழகான வாழ்வு' என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் கிளீன் ஸ்ரீலங்கா செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையால் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள பாரிய சிரமதான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலும் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கலராமநாயக்கவின் ஏற்பாட்டில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் நிமல் பத்திரண தலைமையில் கற்பிட்டி பிரதேச உதவி செயலாளர் சந்தியா பிரியதர்ஷினியின் பங்குபற்றுதலுடன் கற்பிட்டி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது,

இந்நிகழ்வில் இரு சிரமதான வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதன்படி எதிர்வரும் 2025-01-28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாலாவி தொடக்கம் கற்பிட்டி வரையிலான பிரதான வீதியின் இரண்டு பக்கங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் இதற்காக அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், சங்கங்கள் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்வது எனவும் இதன் ஊடாக இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு நுரைச்சோலையிலிருந்து பாலாவி வரை வீதியோர சிரமதான பணியை மேற்கொள்வதற்கு ஒரு குழுவும் மற்றைய குழு நுரைச்சோலையிலிருந்து கற்பிட்டி வரை வீதியோர சிரமதான பணிகளை மேற்கொள்வதற்கும் சகலரின் ஆலோசனைகளுக்கும் அமைய தீர்மானிக்கப்பட்டது .

இரண்டாவது கட்டமாக எதிர்வரும் 2025-02-02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டக்குழி கடற்கரை, கண்டக்குழி குடா மற்றும் ஆலங்குடா, இலந்தையடி கடற்கரை என சுற்றுலா பயணிகள் செல்லும் கடற்கரைப் பகுதிகளை சிரமதான வேலைத்திட்டம் ஊடாக துப்புரவு செய்தல் என்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

மேற்படி இரு சிரமதான வேலைத்திட்டங்களிலும் நலன் விரும்பிகள் சகலரும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் சிரமதான வேலைத்திட்டம் மேற்கொள்ளும் இடங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதோடு அவ்விடங்களை அசுத்தப்படுத்துபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா மாவட்டத்தில் மீண்டும் கன மழை; 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிப்பு

வவுனியாவில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கன மழையால் 20 குடும்பங்களைசேர்ந்த65பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன்,தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளதாகமாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வவுனியாவில் தொடர்ச்சியாக கன மழை பெய்து வருகிறது. இதனால் வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் இடர்நிலமை ஏற்பட்டுள்ளதுடன் பல வீடுகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தவகையில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெளுக்குளம் பகுதியில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். செட்டிகுளம் பிரதேசசெயலக பிரிவில் பீடியாபாம் பகுதியில் 19 குடும்பங்களை சேர்ந்த 61 பேரும் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மத்திய நீர்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள பாவற்குளம், இராசேந்திரங்குளம், ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம் மற்றும் கல்மடு அணைக்கட்டு என்பன நீர் வரத்து அதிகரித்தமையால் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருகின்றன.

இதனால் இதன் கீழ் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. 100

# குடிவரவு குடியகல்வு திணைக்கள வவுனியா அலுவலகம் வெள்ளத்தில் மூழ்கிப்போனதால் அதன் பணிகள் பாதிப்பு

வவுனியாவில் பெய்து வரும் கன மழை காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வெள்ளத்தில்மூழ்கியதால்அதன்செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வந்த நிலையில் நேற்று (புதன்கிழமை) காலை முதல் கன மழை பெய்து வருகிறது.

இதன்காரணமாக வெள்ள நீர் காரணமாக வவுனியா குடிவரவு குடியகல்வு பிராந்திய அலுவலகத்திற்குள் வெள்ளநீர் புகுந்த வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. இதனால் அதன் கடவுச் சீட்டு விநியோக செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதுடன், அலுவலகத்தில் கடமையாற்றுவோர் வெள்ளத்திற்குள் நின்று தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த நீரை வெளியேற்றுவதற்கு அலுவலக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். 100










காலைக்கதிர் Kalaikkathir

# நெல்லுக்கு உத்தரவாத விலையை விரைந்து அறிவிக்கவேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை



நெல்லுக்கானஉத்தரவாதவிலைமற்றும்அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை இன்னமும் அறிவிக்கப்பட்டு அது வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. குறிப்பாக நெல் கிலோ ஒன்றின் உறுதியான விலையையும், அரிசி கிலோ ஒன்றின் உறுதியான விலையையும் உடனடியாக அறிவித்து அதனை வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டும்.

இதுவரை காலமும் இலங்கையில் ஆண்டுதோறும் 40 லட்சம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில், அவற்றில் 10ஆயிரம் மெற்றிக்தொன் அளவிலான நெல்லே அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. என்றும் கடந்த ஆண்டுகளில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து சுமார் 5000 மெற்றிக்தொன் அரிசியே கொள்வனவு செய்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அரச உணவுக்களஞ்சியங்கள் ஃ நெற்களஞ்சியங்கள் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளைவிரைவாகஎடுக்கவேண்டும். அதற்கு முன்னர் இம்முறை உலர் அரிசி மற்றும் ஈர அரிசியை நெல்லினை உரிய தரத்திற்கு ஏற்ப கொள்வனவு செய்து அதற்கு உடனடியாக களஞ்சிய வசதியை பயன்படுத்துவதற்கு அரிசி சந்தைப்படுத்தல் சபையானது சுமார் 2 லட்சம் மெற்றிக்தொன் அரிசியை சேமித்துவைக்கக்கூடிய சேமிப்புத்திறனைக் கொண்டுள்ளது, உணவுத்திணைக்களம், ச.தொ.ச ஆகிய நிறுவனங்களில் நெற்களஞ்சியங்களையும் பயன்படுத்துவதுவதன் மூலம் ஏறத்தாள 3 லட்சம் மெற்றிக்தொன் வரையான நெல்லினை கொள்வனவு செய்து சேமிக்கமுடியும்.

நெல் அறுவடை காலங்களில் உலரவிடும் தளங்கள் இல்லாமையால் விவசாயிகள் வீதிகளில் நெல்லை உலரவிடுவதால் வீதிகளின் நெருக்கடி மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் எடுத்து அதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

தற்போது அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நாவற்குழிஉணவுக்குகளஞ்சியம்போன்றஇடங்களில் நெல் அறுவடை காலங்களில் நெல் உலரவிடுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

ஏனெனில் வயலில் அறுவடை செய்யும்போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கும் கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை.

# கனமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட திருக்கோவில் காற்றாடித் திருவிழா 25இல்

(சகாதேவராஜா)

கனமழை வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட திருக்கோவில் 7 ஆவது காற்றாடித் திருவிழாவும் டிஜே இசை நிகழ்ச்சியும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

தமிழர்களின் நன்னாளான தைத்திருநாளை முன்னிட்டு அன்றையதினம் நடைபெறவிருந்தமை தெரிந்ததே. எனினும் அக் காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இப்பட்டத்திருவிழா திருக்கோவில் பொது மக்களின் ஏற்பாட்டில் பிரபல சமூக செயற்பாட்டாளரும், கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமாரின் பூரண அனுசரணையில் நடைபெறவிருக்கிறது.

திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி ஆலயக் கடற்கரை முன்றலில் இக் காற்றாடித் திருவிழா 25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிதொடக்கம் இரவு 10 மணிவரை நடைபெறவிருக்கிறது.

அவ் விழாவில் தேசிய மட்ட சாதனையாளர் ஒருவரும், விளையாட்டில் சாதனை படைத்த மாணவர் ஒருவரும் பரிசு வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார் என பட்டத் திருவிழா அமைப்பினர் தெரிவித்தனர்.

# கொழும்பு – காங்கேசன் இடையிலான தொடருந்து சேவைகளை அதிகரிக்குக

## போக்குவரத்து அமைச்சரிடம் சர்வதேச இந்துமத பீடம் கோரிக்கை

இலங்கையில் உள்ள ரயில் சேவைகளில் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் ரயில் சேவை கொழும்பிற்கும் காங்கேசன் துறைக்குமான ரயில் சேவைகள் ஆகும். அதே வேளை கூடுதலான ரயில் சேவைகளை ஈடுபடுத்தினால் மேலும் ரயில் சேவை மூலம் அதிக வருமானம் அரசு பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. அத்துடன் இரவு தபால் சேவைக்கான ரயில் சேவையும் மக்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதேவேளை கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் வடபகுதிக்கன ரயில் சேவைகளை பலர் வேண்டுகோள் விடுக்கின்றனர். கல்கிசையில் இருந்து ஆரம்பிக்குமாறு வேண்டுகின்றனர். எனவே மக்களின் நலன் கருதி செயற்படும் அனுர அரசு அடிப்படை இந்த தேவையை நிச்சயம் போக்குவரத்து அமைச்சருக்கு ஜனாதிபதி அவர்கள் உரிய அறிவுறுத்தல்களை கொடுத்து இந்த வட பகுதிக்கன சேவைகளை கல்கிசையில் இருந்து காங்கேசன்துறைக்கான சேவைகளை நடத்த ஏற்பாடு செய்தால் ரயில் பயணிகளுக்கு மிகவும் இலகுவாக இருக்கும் என சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா போக்குவரத்து அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கூட நாடாளுமன்ற பிரதிநிதிகள் இது பற்றிய தேவைகளை கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இது பற்றி மேலும் கடற்தொழில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரிடமும் பாப்புசர்மா தொலைபேசி மூலம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை வயல் பிரதேசத்தில்

# வெள்ளத்தில் சிக்கிய 16 விவசாயிகள் மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிடைச்சிமடு, ஆத்துச்சேனை வயல் பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய 16 விவசாயிகளை செவ்வாக்கிழமை கல்குடா அனர்த்த அவசர சேவை மீட்பு அணியினால் மீட்கப்படு கரைசேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள வயல் பிரதேசத்தில் வேளாண்மை நடவடிக்கைக்கா திங்கட்கிழமை விவசாயிகள் சென்ற நிலையில் வயல்கள் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையினை சமூக செயற்பாட்டாளரும் கல்குடா டைவர்ஸின் ஆலோசகருமான முபாறக் ஹாஜியார் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏதாஹிரின் மற்றும் பிரதேசசபையின் செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீன், கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து கல்குடா அனர்த்த அவசர சேவை மீட்பு அணியினர் இயந்திர படகுமூலம் குறித்த வயல் பிரதேசங்களுக்குச் சென்று 16 விவசாயிகளை மீட்டு கரைக்கு கொண்டுவந்தனர்.



# திருக்கோவில் தம்பிலுவில் பொது சந்தை புதிய கட்டடத் தொகுதி நேற்றுத் திறப்பு

(கார்த்திகேசு)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச சபையின் தம்பிலுவில் பொதுச் சந்தைக்கானபுதியகட்டடத்தொகுதிவைபவ ரீதியாக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேசசபையின் செயலாளர் திருமதி ஜெயந்தி வீரபத்திரன் தலைமையில் தம்பிலுவில் பொது சந்தைக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்று இருந்தது.

திருக்கோவில் பிரதேசசபையின் தம்பிலுவில் பொதுச் சந்தைக்கான புதிய கட்டடத் தொகுதியானது உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் ஊடாக திருக்கோவில் பிரதேச சபையால் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு இருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி கலந்து கொண்டு இருந்ததுடன், நிகழ்வில் திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆர்.டபிள்யூ.கமலராஜன் திருக்கோவில் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் கட்டட ஒப்பந்தக்காரர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.





காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை.

கண்களுக்கு காணும் வரிசைக்கு பதிலாக நிகழ்நிலை வரிசை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு கடவுச்சீட்டொன்றை பெற்றுக்கொள்ள நீண்டகாலம் காத்திருக்கவேண்டி இருப்பதாக மக்களின் கவலைக்கு ஆளும்தரப்பு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். பொலிஸ் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் 2024ஆம் ஆண்டில் 101 துப்பாக்கி பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் 60 மனித படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

அதனால் நாட்டின் சட்டம் ஒழுங்கு தொடர்பில் ஆளும்தரப்பு அதிக கவனம் செலுத்தி இந்த நடவடிக்கைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெய் இறக்குமதி விடயத்தில் 2024 ஜனவரி முதல் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. சுத்திகரிக்கப்பட்டு விற்பனை செய்யும்போது 18 வீதம் பெறுமதி சேர் வரியும் 2.5 வீதம் சமூக பாதுகாப்பு வரியும் விதிக்கப்பட்டாலும், இவ்வாறு சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து, பின்னர் சுத்திகரித்து சந்தைப்படுத்துவதில் அரசுக்குச்சேர வேண்டிய வரிகள் கிடைக்கவில்லை. இது 5 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகிறது. இது தொடர்பில் தீர்வு காணப்படவேண்டும்.

மேலும் துறைமுகத்தில் கொள்கலன்களை பரிசீலனை செய்து விடுவிக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்தாததால், அதிக எண்ணிக்கையிலான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை புறக்கணித்துச்சென்றுள்ளன. இதுவரை பரிசீலனை செய்யமால் இருக்கும் 4 ஆயிரம் கொள்கலன்கள் துறைமுகத்துக்குள் தேங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் ஆளும்தரப்பு இது தெடர்பாகவும் விரைவாக நடவடிக்கை எடுத்து, கொள்கலன்களை விடுவிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும்.

சிரேஷ்ட பிரஜைகள் தமது சேமிப்பிற்கு பல்வேறு ஆளும்தரப்புகளின் கீழ் 15 வீத வட்டியை பெற்று வந்தனர். ஆனால் 2022 முதல் அது குறைக்கப்பட்டு தற்போது 7-, 8 என்கிற வட்டி விகிதத்தை பெற்று வருகின்றனர். 15 வீதம் வட்டி விகிதம் திரும்ப வழங்கப்படவேண்டும்.

பஸ் மற்றும் ஓட்டோக்கள் மீது சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், சுற்றுலாத் துறை மற்றும் தேசிய பூங்காக்களில் சபாரி ஜீப் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் ஏராளமானோர் வருமானம் பெறுகின்றனர். எனவே, இந்த ஜீப் வண்டிகள் விடயத்தில் உரியவாறு நடந்து கொள்ளுங்கள்.

ஓட்டோக்கள் மற்றும் பஸ்களின் தேவையற்ற உதிரிப் பாகங்கள் அகற்றப்பட்ட போதிலும் அதே சட்டம் இந்த ஜீப் வண்டிகள் மீதும் பிரயோகிக்கப்படக்கூடாது. இது சுற்றுலாத்துறைக்கு தேவையான ஒரு வண்டியாகும். மேலும் ஏறக்குறைய 45,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுங்கள். ஆளும் தரப்பின் தேர்தல் வாக்குறுதிகளில் இது ஒரு முக்கிய முன்மொழிவாக இருந்ததால் இந்தப் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுங்கள்.

22000 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்திசெய்ய இவர்கள் பெரும் தியாகங்களைச் செய்தனர். இவர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுங்கள். இத்தரப்பினர் கடந்த காலங்களில் தமது போராட்டத்தின் போதுகூட பிரச்சினைகளை எதிர்கொண்டதால், இந்த விடயம் குறித்து கூடிய கவனம் செலுத்துங்கள்.

கல்வித் துறையில் 706 வெற்றிடங்களை நிரப்ப வர்த்தமானி வெளியிடப்பட்டு பரீட்சைகள் நடைபெற்றன. பரீட்சைப் பெறுபேறுகளை விரைவில் வெளியிட்டு, உரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவும். மேலும் கல்வியியற் கல்லூரி மற்றும் தாதி பயிலுநர் பயிற்சியில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குங்கள். அடுத்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுங்கள். கல்வியயற் கல்லூரிகள் ஊடாக பட்டம் வழங்கும் திட்டத்தை முன்னெடுங்கள்.

கிராம உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணக் குறிப்பு, கொடுப்பனவுச் பிரச்சினை, அஸ்வெசும நிவாரணத் திட்டப் பிரச்சினைகள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற பல சிக்கல்களை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

கிராமத்தில் பெரும் பணிகளைச் செய்யும் கிராம உத்தியோகத்தர்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி, அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## செல்வம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் நீதிமன்றத்தால் தொடரப்பட்டுள்ள வழக்கு ஒன்றில் பிடியாணை பிறப்பிக்கட்ட நிலையில் நேற்று நீதிமன்றத்திற்குச் சென்று வந்த பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் முள்ளிவாய்காலில் நடந்த பேரிடர்களையும், இராணுவம் செயத கொடூரமான செயற்பாடுகளையும் பொது வெளியில் பேசியதால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இலங்கை அரசுக்கு எதிராகச் சதி செய்தேன் என்ற அடிப்படையில் எம்மை கைது செய்தார்கள்.

வவுனியாவிலும், அனுராதபுரத்திலும் வழக்குகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஜனவரி 16 வழக்கு நடைபெற்றபோது நான் சமூகமளிக்கவில்லை. அதனால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்று அந்த பிடியாணையை உத்தரவை நிவர்த்திசெய்வதற்காக நான் எனது வழக்கறிஞர் உடன் நீதிமன்றம் சென்றிருந்தேன். நீதிமன்றம் எனக்கு 25,000 ரூபாய் ஆட்பிணை வழங்கியது. எனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என்றும் நீதிமன்றத்தில் உத்தரவிட்டது. வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தி செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவருகிறது. என்னோடு மரியசீலன் என்பவர் தொடர்ச்சியாக இந்த வழக்கில் சமூகமளித்துக் கொண்டிருக்கிறார். அவர் 8 வருடம் சிறையில் இருந்தவர் - என்றார்.

இதற்கமைய போக்குவரத்து வீதி மீறலை செய்யும் சாரதிகள் வசிக்கும் பொலிஸ் பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டு, அதற்கான தண்டப் பண சீட்டு வழங்கப்படவுள்ளது.

## கலாசார மைய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தக் கட்டடம் அதன் முழுமையான அம்சங்கள் ஆராயப்படாமல் நிர்மாணிக்கப்பட்டமையே இந்த நிலை உருவாக காரணமாகியது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறிருக்கையில் கடந்த 18.01.2025 ஆம் திகதி சனிக்கிழமை இதன் பெயர் 'திருவள்ளுவர் கலாசார மையம்' என மாற்றப்பட்டதாக இலங்கையின் பிரதி கலாசார அமைச்சரும் இலங்கைக்கான இந்திய தூதுவரும் வேறு சிலரும் கலந்துகொண்ட சந் திப்பில் பெயர் மாற்றத்துடனான பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின் அரசியல் தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை என்பது எமக்கு மிகவும் ஆச்சரியத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இந்த நடவடிக்கை பற்றிய ஆழமான அதிருப்தி உள்ளது என்பதை மட்டும் குறிப்பிட்டு, இது ஒரு இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையேயான உணர்வுபூர்வமான விடயம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் அதனால் விபரமாக அதிருப்தியை பதிவு செய்வதை தவிர்க்கிறோம்.

தெய்வப்புலவர் ஐயன் திருவள்ளுவருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ஔவைக்கும், மாகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் நாமாக இங்கு சிலை எடுத்தவர்கள் நாங்கள். தெய் வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இப்படியிருக்கையில் இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாணம்' என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும். இது இந்தியாவுக்கும் எமக்குமிடையேயான நல்லுறவில் ஆழமான குழி யாக அமைந்து விடக்கூடாது என நாம் திடமாக நம்புகிறோம். 'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம். இனத்தின் அடையாளம் ஆகும். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

மேலும் இந்த புதிய பெயர் மாற்றத்திற்கான அறிவித்தலில்கூட தமிழ்மொழி மூன் றாமிடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இலங்கை அரசின் அரசமைப்பின் 16ஆவது இலக்கதிருத்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகும். சிங்களம் அடுத்த நிர்வாக மொழியாக வும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்பது அரசியலமைப்பின் ஏற்படாக இருக்கையில் சிங்கள மொழியில் முதலாவதாகவும் ஆங்கில மொழியில் இரண்டாவதாகவும் தமிழ் மொழியில் மூன்றாவதாகவும் பெயர்ப் பலகை எழுதப்பட்டிருப்பது இந்த ஏற்பாடுகளை மீறும் செயலாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்பே நல்லுறவைப் பாதிப்பின்றி பேணும் பொருட்டு இந்த மீளாய்வுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றாம் என்றுள்ளது.

## 20 பில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுக் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜித்த ஹேரத், சீன ஜனாதிபதி சி ஜின்பிங் மற்றும் அந்நாட்டுப் பிரதமர் உள்ளடங்கலாக உயர்மட்டப்பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்புக்களின்போது கொழும்புத்துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தார்.

அதேபோன்று இந்தப் பயணத்திபோது சீன அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 500 மில்லியன் யுவான் (20 பில்லியன் இலங்கை ரூபா) நிதி எமக்குக் கிடைக்கப்பெற்ற பெருவெற்றி எனவும், எதிர்வருங்காலங்களில் அந்நிதி நாட்டு மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகநகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ஓரங்கமாக, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தை விடவும் விசாலமான மாநாட்டு மண்டபமொன்றை சீன நிதியுதவியுடன் கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிப்பதற்கான இருதரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும், அதனை முன்னிறுத்திய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்வருங்காலங்களில் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும் என்றும் விஜித்த ஹேரத் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட சில அரச ஊடக நிறுவனங்களுக்கும், சீனாவின் சின் ஹூவா செய்திச்சேவை நிறுவனத்துக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்படி, எதிர்வருங்காலங்களில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி வழங்கல் மற்றும் ஊடகத்துறையை மேம்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# அஸ்வெசும இரண்டாம் கட்ட தகவல் சேகரிப்பு ஆரம்பம்

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பத்தாரிகளின் வீடுகளுக்கு வருகை தந்து தகவல் சேகரிப்பு செய்யும் நிகழ்ச்சித்திட்டம்நாடுபூராகவும் செவ்வாய்க்கிழமைஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசசெயலகத்தில்மட்டக்களத் தரவை-2 கிராம சேவகர் பிரிவில் அம்பாறைமாவட்டசெயலாளர் சிந்தக அபேவிக்ரமவினால் உத்தியோகபூர்வமாகசெவ்வாய்க் கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இவ் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா,உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ் லம்,அம்பாறை மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், அஸ்வெசும திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப் பாளர் டி.எம் குணசேகர, அபிவிருத்தி உத்தியோகத்தர் எப்.ஜெஸீலா,கிராம சேவகர் எம்.பரீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முன்பள்ளி பரிசளிப்பு விழா

(ஹலால்தீன்)

தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை வுஹாரி முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா ஈச்சநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



புஹாரி முன் பள்ளி ஆசிரியைகளான ஏ ஆர்.சௌஜானா, ஆர். சப்ரின் ஆகியோரின் தலைமையின்கீழ்இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக டொக்டர் கில்மி ஃ மஹ்ருப், முன்பள்ளி பண்பாட்டலுவகல் பணிப்பாளர் கீத்தாஞ்சலி, முள்ளிப்பொத்தானை ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி நசுர்கான்,அல் ஹிஜ்ரா அதிபர் மன்சூரலி, வெளிக்கள உத்தியோகத்தர்களான எம். நவாஸ்தீன், முஹம்மது ரியால், பலநோக்குக் கூட்டறவுச் சங்கத்தின் உறுப்பினர் சாலிகீன், சமூக சேவையாளர் நியாஸ் உட்பட பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்பள்ளி ஆசிரியைகளான ஏ.ஆர். சௌஜானா , ஆர்.சப்ரின் ஆகியோர் கௌரவிக்கப் பட்டனர். அத்தோடு மாணவர் களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றனஅவர்களுக்கான பரிசல்களும் வழங்கப்பட்டன.





# சீன அரசால் வழங்கப்பட்ட சீருடைத் துணி விநியோகம்

## கிளிநெநாச்சியில் திங்களன்று

சீன அரசால் பாடசாலை மாணவர்களுக்குஇலவசமாக வழங்கப்பட்ட சீருடைத்து ணிகள் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் கையளிக்கப்பட்டன.

குறித்த சீருடைத் துணிகள் கிளிநொச்சி பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கிளிநொச் சியிலுள்ள நான்கு கோட்டங் களுக்கும்கொண்டுவரப்பட்டன



தொடர்ந்து, சீருடைத்து ணிகள் திங்கட்கிழமை பாடசாலை அதிபர்களிடம் விநியோகிக்கப்பட்டன.

# சிறப்பாக இடம்பெற்ற வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் பொங்கல் விழா





வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் பொங்கல் விழாவானது மூன்றுமுறிப்புபகுதியில்அமைந்துள்ள முன்பள்ளி வளாகத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களால் தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் முகமான பல கலை நிகழ்வுகளும், நடனங்களும் இடம்பெற்றிருந்தன.

இலங்கை தேசிய சமாதான பேரவையின்திட்டத்தின்கீழ்வவுனியா மாவட்ட சர்வ மத பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப் பொங்கல் நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய முன்பள்ளி மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது.

இதன்போது பொங்கல் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருள்களும் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கபபட்டது. இதில் மதத் தலைவர்கள், வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் அங்கத்தவர்கள் எப்.ஐ.ஆர் எம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100








காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை நீலாவணையிலே மக்களை பாதிக்கின்ற மதுபானச்சாலை அமைப்பதைத் தடுத்து நிறுத்துக

## நாடாளுமன்றில் கோடீஸ்வரன் எம்.பி. கோரிக்கை

(ரஜீவன்)

கல்முனை நீலாவணையிலே மக்களை பாதிக்கின்ற மதுபானசாலை அமைப்பதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கிளீன் சிறீலங்கா தொடர்பாக நாடாளுமன்றில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது -

விசேடமாக க்ளீன் ஸ்ரீலங்காவின் ஊடாக இந்த நாட்டை சிறப்பாக நடத்துவதற்காக முன்னெடுக்கப் படுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் என்னாலான அனைத்து ஒத்துழைப்பையும் நான் வழங்குவதற்கு தயாராக இருப்பதோடு, இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக, நீலாவணை பொதுமக்கள் ஒன்றுகூடி கிட்டத்தட்ட 500 பேருக்கு மேற்பட்டவர்கள் மதுபானசாலையை ஒழிப்பதற்காக க்ளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒரு முன்னேற்பாடாக அந்த இடத்திலேயே மக்கள் விசேடமாக மதுபானசாலை நீலாவணையிலே அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த மதுபானசாலை அந்த இடத்திலே அமைக்கப்படும் என்றால் அங்கே இருக்கின்ற பாடசாலை மாணவர்கள், அதேபோல் அங்கே உழைக்கின்ற உழைத்து அன்றாடக் கூலி வேலை செய்கின்ற வர்க்கத்தினர் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்ற சூழ்நிலை, சந்தர்ப்பம் ஏற்படக்கூடிய வாய்ப்புண்டு.

அதேபோல்,இளம்மாணவர்கள்பாதிப்படைகின்றார்கள். இதை நீங்கள் ஏதோ ஒருவகையில் உங்களது சட்டத்துக்கு உட்பட்ட வகையில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு அதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்த 3 மாதத்துக்கு முன் நீலாவணையிலே அந்த மதுபானசாலை திறக்கப்பட்டிருந்தது. மக்களின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக மக்கள் எதிர்ப்பு செய்ததன் காரணமாக அது மூடப்பட்டிருந்தது; ஆனால் தற்பொழுது அதனை திறப்பதற்காக அந்த மதுபானசாலை கம்பெனியானது, திறப்பதற்காக அதன் முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருக் கின்றார்கள்.

ஆகவே,அந்தமக்கள் மதுபானசாலையை இல்லாமல் செய்வதற்காக கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே ஆர்ப்பாட்டம் செய்கின்ற நிலையில், அவர்களுக்குரிய ஒத்துழைப்பை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.



ஏனென்றால் இந்த அரசு வருகின்ற பொழுது மதுபான சாலைகளுக்கு கொடுத்த அனுமதிப்பத் திரத்தை நாங்கள் ஒழிப்போம், மதுபானசாலைகளை இல்லாமல் செய்வோம் என்று சொல்லிவிட்டு வந்த பின்பு நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்று முடிந்தது. இன்று மதுபானசாலையை அமைப்பதற்கான நடவடிக்கை அந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே இதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடமைப்பாடு உங்களுக்குள்ளது. ஏனென்றால் பொருளாதாரத்திலே பெரிய தாக்கத்தை அது ஏற்படுத்துகின்றது. மாணவர்கள் பாதிப்புக்குள்ளாக நேரிடுகின்றது. அதேபோல் அன்றாடக் கூலித் தொழில்கள் செய்கின்றவர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

தென் பகுதியிலே இருக்கின்ற மதுபானசாலை உரிமை பத்திரத்தில் இருக்கின்றவர்கள் கல்முனை பிரதேசத்திலே வந்து மதுபானசாலை அமைப்பதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆகவே அரசு இதனைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீங்கள் பழைய ஆட்சிக்காலத்திலே செய்யப்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான்

உங்களுக்கு மக்கள் 159 பிரதிநிதித்துவ ஆணையை தந்திருக்கிறார்கள்.

விசேடமாக எமது மக்கள் உங்களுக்காகத்தான் கூடுதலான வாக்குகளை அளித்தார்கள். ஆனால் தற்போது ஏமாற்றத்தை சந்தித்த வண்ணம் இருக்கின்றார்கள்.

மேலும் ஆலயடிவேம்பு பிரதேசத்தில் இருக்கின்ற பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான இரண்டு காணிகள், மட்டுமல்ல, 100ஓ40 அளவிலான இரண்டு கட்டடங்களில் 2020ஆம் ஆண்டு முகத்துவாரத்திலே இருக்கின்ற இலங்கை தரைப்படையானது, இயக்குனர் சபையினதும் பொதுச்சபையினதும் அனுமதி இல்லாமல் வலுக்கட்டாயமாக அந்த காணிகளையும் கட்டடத்தையும் அபகரித்தார்கள்.

கிட்டத்தட்ட 1969ஆம் ஆண்டில் இருந்து அதனை பல் நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் பராமரித்து வந்திருக்கிறார்கள். இதற்காக அவர்கள் கூட்ட தீர்மானத்தின் ஊடாக பல கோடிக்கணக்கான ரூபாக்கள் செலவு செய்து இருக்கிறார்கள் . அதேபோல் 1991ஆம் ஆண்டு நெல் கொள்வனவு செய்து சுத்திகரிப்பதற்காக

இயந்திர உபகரணங்களை அமைத்திருந்தார்கள். ஆனால் அனைத்தையும் இல்லாமல் செய்துவிட்டு ஏற்றுக்கொள்ள முடியாத வகையிலே படையினர் அந்த காணியை அபகரித்து இருப்பது உண்மையாக கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

அந்தக் காணி ஆலயடி வேம்பு பொதுமக்களுக்குரிய சொத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குரிய சொத்து . அவர்களுடைய சந்தா பணத்திலிருந்து வந்த சொத்து.

அதுமட்டுமல்ல, அவர்கள் நெல்லை கொள்வனவு செய்து குறைந்த, கட்டுப்பாட்டு விலையிலே

அரிசியினை அரசாங்க அதிபர், அதே போல் பிரதேச செயலாளர், கூட்டுறவு ஆணையாளர் என்போரின் அனுமதியோடு பொதுமக்களுக்காக அதை விநியோகித்திருந்தார்கள்.

ஆனால் 2023 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக அதை எடுத்திருக்கிறார்கள். ஆனால் 2010 ஆம் ஆண்டு தரைப்படையின் தலைமையலுவலகம் அந்தக் காணியை கொடுக்கும்படி இராணுவ தலைமையகத்துக்கு தகவல் அனுப்பியிருந்தது. அதேபோல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அந்த அறிவுறுத்தலை விடுத்திருந்தார்.

அது மட்டுமல்ல இராணுவ கட்டளைத் தளபதி கூட அதனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குக்கு திருப்பி வழங்கியருந்தார்.

எனவேதான், இந்த விடயங்களை கருத்தில் கொண்டு அதனை மக்கள் செயற்பாட்டிற்காக மீண்டும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் விடயம் ஆராயப்பட்டு விரைவில் நீதி நிலைநாட்டப்படவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் இந்தியா செல்லும் போது இலங்கை விமான நிலையத்தில் வைத்து அவரை வெளிநாட்டுக்கு செல்லவிடாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் வெளிநாடு செல்ல தடை உண்டு என விமான நிலைய அதிகாரிகள் சொன்னதாகவும் சிவஞானம் சிறிதரன் எம்.பி நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார். இது பாரதூரமான குற்றச்சாட்டாகும். இவ்வாறு நாம் ஆதரவளித்த தேசிய மக்கள் சக்தி அரசில் நடந்திருப்பது கவலை தரும் விடயமாகும் என ஐக்கிய காங்கிரஸ் தெரிவித்துள்ளது.



ஐக்கிய காங்கிரஸ் சார்பில் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் வெளியிட்டு ஊடக அறிக்கையில் இது பற்றி அரசு கட்டாயம் விசாரிக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளிநாடு போக முடியாது என நீதிமன்றம் தடைவிதித்ததா? இல்லையாயின் தடை உள்ளது என சொல்ல விமான நிலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளதா போன்ற விடயங்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு, அதை பொது மக்களுக்கு தெரிவிப்பதோடு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொள்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# குறிஞ்சாகேணி பாலத்தின் நிர்மாணத்துக்கு 10.5 மில்லியன் அமெ. டொலர்கள் ஒதுக்கீடு

(ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள குறிஞ்சாகேணி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க நிதியமைச்சு 10.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

பேராதனை-பதுளை-செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டத்தின் எஞ்சிய நிதி குறிஞ்சாகேணி பாலத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான திருத்தப்பட்ட உடன்படிக்கையில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பணிப்பாளர் (சட்டம்) அப்துல்மொஹ்சென்ஏஅல்முட்லா ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுவதன்மூலம்திருகோணமலை கிண்ணியாபிரதேசத்தில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் மக்களின் போக்குவரத்து மற்றும் வணிகத் தேவைகள் இலகுவாக்கப்படும்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2025இல் வெளியிடப்பெற்றது